குறள் வெண்பா நூல்-ந.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனூர்

இயற்றிய

வள்ளுவர் நேரிசை

முன்னுரை

வள்ளுவர் நேரிசை வெண்பாவாகிய இந்நூலை யியற்றிய அரசஞ்சண்முகனார் மதுரை மாநகருக்கு அண்மையிலுள்ள சோழவந்தான் (சோழன் வீழ்ந்தான்) என்னும் ஊரிலே 1868 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் அரசப்ப பிள்ளை. இவருடைய காலத்திலே சென்னை மாநகரில் ஒரு சண்முகம்பிள்ளை வாழ்ந்திருந்தார். அவரும் புலவர். அவரினின்று தம்மை வேறுபடுத்தியறிதற் பொருட்டு இவர் தம்முடைய பெயருக்கு முன்னால் தந்தையாருடைய பெயரையுஞ் சேர்த்துத் தம்முடைய பெயரை அரசஞ் சண்முகனார் என்று அமைத்துக்கொண்டார்.

இவர் இளம்பருவத்தில் கல்வியிற் கருத்துச் செலுத்தவில்லை. திண்ணிமடத் தலைவராக விருந்த சிவப்பிரகாச அடிகள் இவருக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கிக் கல்வியில் ஊக்கத்தை யுண்டுபண்ணினார். பிறகு சண்முகனார் வருந்திக் கல்விகற்றுச் சிறந்த புலமையடைந்தார்; ஆராய்ச்சிகள் பல செய்யத் தொடங்கித் திருக்குறள், தொல்காப்பியம் முதலிய நூல்களுக்குப் புதுப்புது உரைகளைக் கண்டுபிடித்தார். இதனால் இவருடைய புகழ் யாண்டும் பரவியது. பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணி புரிந்ததோடு நூல்களியற்றும் பணியிலும் இறங்கி மாலை மாற்று மாலை, இன்னிசையிருநூறு, மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை, திருவடிப்பத்து, சிதம்பர விநாயகர் மாலை, தொல்காப்பியச் சண்முக விருத்தி, திருக்குறள் சண்முகவிருத்தி, ஆகுபெயர் அன்மொழித் தொகை ஆராய்ச்சி, ஏகபாத நூற்றந்தாதி, முருகக் கடவுள் கலம்

பகம், இசை நுணுக்கச் சிற்றுரை, நுண்பொருட் கோவை, மதுரைச்சிலேடை, நவமணிக்காரிகை நிகண்டு, பஞ்சதந்திர வெண்பா, வள்ளுவர் நேரிசை என்னும் நூல்களை யியற்றினர்.

இவற்றுள் 'வள்ளுவர் நேரிசை' என்னும் இந்நூல் சோமேசர் முதுமொழிவெண்பா, தினகர வெண்பா, இரங்கேச வெண்பா, சிவசிவவெண்பா, வடமலைவெண்பா முதலிய நூல்களைப்போல் முதலிரண்டடிகளில் திருக்குறளுக்குரிய எடுத்துக்காட்டுக் கதைகளை யமைத்துப் பின்னிரண்டடிகளில் திருக்குறளைச் சேர்த்து முழுவெண்பாவாக அமைக்கப் பட்டது. மற்றைய நூல்கட்கும் இதற்கும் வேறுபாடு யாதெனின் பிறநூல்கள் அதிகாரத்திற்கு ஒரு குறள் மட்டும் எடுக்கப்பட்டு அதிகாரத்திற்கு ஒரு வெண்பா மட்டும் அமைக்கப்பட்டிருக்கிறது. வடமலை வெண்பா முதலியன அறத்துப் பாலுக்கும் பொருட்பாலுக்கும் மட்டுமே செய்யப் பட்டுள்ளன. சண்முகனர், திருவள்ளுவருடைய பத்துத் திருக்குறட் பாக்களுக்கும் உதாரணக் கதை காட்டிப் பத்துப் பாடல்கள் பாடலானர். ஆனல் இவர் 1330 திருக்குறளுக்கும் பாடி முடிக்கவில்லை. நூல் முடிவதற்குள் நோயின் கொடுமையினுல் இவர் முடிந்து போனர். இருநூற்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கு இவர் இவ்வாறு உதாரணக் கதையமைத்துப் பாடியுள்ளார் என்று ஐயமறத் தெரிகிறது. ஆனல் நமக்கு இப்பொழுது அகப்படுவன முதல் பத்து அதிகாரங்கட்குரிய நூறு பாடல்களே. இப்பாடல்களும் மறைந்தொழியாது பாதுகாக்க வேண்டுமென்னும் எண்ணத்தோடு இதனையும் இதனைப் போன்ற பிற திருக்குறள் வெண்பா நூல்களையும் இவ்வாறு வெளிப்படுத்தலாயிற்று.

வள்ளுவர் நேரிசை

தற்சிறப்புப் பாயிரம்

திருத்தகு தெய்வத் திருவள் ளுவர்தாள்
வருத்தமறச் சென்னிமிசை வைத்துக்—கருத்திருத்தி
அன்னூர் மறைப்பாட்டோடியானுமரைப் பாட்டிசைப்பேன்
முன்னே ரிசைப்பேர் மொழிந்து.

முதலாம் அதிகாரம்

கடவுள் வாழ்த்து

ஈசன்கண் மூட இருண்ட துலகமென
மாசற்றூர் கூறலென்கொல் வள்ளுவரே—பேசில்
அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

நான்மறைநூல் கற்றும் நவின்றுந் தலையிழந்தார்
மான்மகனூர் என்னேயோ வள்ளுவரே—நூன்முற்றக்
கற்றதனுல் ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

சாதலுற ஏனோர் தமிழ்மா முனிமுதலாம்
மாதவத்தோர் வாழ்வதென்கொல் வள்ளுவரே—ஓதின்
மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

கல்லே புணையாக் கருங்கடலை நாவரையர்
வல்லே கடந்ததென்னே வள்ளுவரே—சொல்லுங்கால்
வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

தந்தையார் தாள்எறிந்தும் சாராமை என்னே வினை
மைந்தர் ஒருவர்க்கு வள்ளுவரே—நந்தும்
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

தாடொழார் சீர்உரையார் சாக்கியனுர் கல்எறிந்தும்
வாடாத வீடுறலென் வள்ளுவரே—நாடில்
பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார். 6

பண்டுதவஞ் செய்தும் கவலைப் படலென்னே
வண்டாரு காவனத்தார் வள்ளுவரே—தொண்டாய்த்
தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 7

ஆயிரத்தெட் டண்டமர சாண்டானும் வெஃகியதென்
மாயாச் சுரர்பதியை வள்ளுவரே—ஆயின்
அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. 8

தீர்த்தரும் போற்றும் சிறுவிதிக்காட் டுத்தலைதான்
வாய்த்ததென்னே தன்தலைபோய் வள்ளுவரே—பார்த்தக்
கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் [கால்
தாளை வணங்காத் தலை. 9

சாயா இரணியனும் சாய அவன்இளம்சேய்
மாயாநல் வாழ்வுறலென் வள்ளுவரே—ஆயின்
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். 10

இரண்டாம் அதிகாரம்

வான் சிறப்பு

மாய்ந்தன மீண்டும் வழிவழித் தோன்றற்கு
வாய்ந்த மருந்தியாதோ வள்ளுவரே—ஆய்ந்தக்கால்
வான்நின் றுலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. 11

ஊணன்றே காப்ப துடலை உயர்வானம்
மாண்அமிழ்தம் ஆவதெங்ஙன் வள்ளுவரே—காணவே
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 12

உற்றநோய் நோலா தொளிர்தா மரைமூலம்
மற்றெழுவர் நாடியதென் வள்ளுவரே—நற்றவர்க்கும்
விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்
துண்ணின் றுடற்றும் பசி. 13

காடன் வரகு கலந்தமண் கொண்டுமுன்பு
வாடிஎயில் ஆக்கியதென் வள்ளுவரே—நாடுங்கால்
ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 14

சின்னாடு வற்கடத்தால் தேய்தலும் பன்னாடு
மன்னி வளர்தலுமென் வள்ளுவரே—உன்னில்
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 15

தண்டகன் ஆண்ட தனிநாடு பின்கானல்
மண்டுசுரம் ஆயதென்னோ வள்ளுவரே—தண்டா
விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. 16

மீனீர் மணிமுதல மேவு நெடுங்கடலும்
மாநிலத்தைக் காவாதோ வள்ளுவரே—ஆனா
நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 17

தள்ளாப் புலவரையான் தாங்ககிலேன் போமினென்றோர்
வள்ள லுரைத்ததென்கொல்? வள்ளுவரே!—விள்ளில்
சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு 18

விதலுறு நாயூனை விண்ணும் படைக்கவல்ல
மாதவத்தோன் தின்றதென்னோ வள்ளுவரே—ஓதுங்கால்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 19

பெய்யமழை இந்திரன்பாற் பெட்டான் பொருநையொடு
வையையுடை யானுமென்னோ வள்ளுவரே—உய்யவே
நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 20

மூன்ரும் அதிகாரம்

நீத்தார் பெருமை

புண்டரிகத் த்தாளார் புதல்வரடிப் போதணிந்தான்
மண்டின்ற மாலுமென்னே வள்ளுவரே—தண்டா
ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு 21

காதற் பரவையுழைக் கண்ணுதலே தூதானுன்
மாதவத்தோன் மாண்பளவென் வள்ளுவரே—ஓதின்
துறந்தார் பெருமை துணிக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று 22

தன்னந் தனிவசிட்டன் தானேபல கோசிகர்க்கு
மன்னர்கோன் தோற்றதென்கொல் வள்ளுவரே-உன்னின்
இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 23

ஐந்தருவாழ் மங்கை அருகுற்றும் இந்திரனுர்
மைந்தனிணங் கான்பயனென்? வள்ளுவரே—நந்தா
உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 24

ஒன்னுர்த் தெறற்கும் உவந்தாரை ஆக்கற்கும்
மன்னுமிரு சான்றுரைப்பீர் வள்ளுவரே—தன்னுள்ளே
ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. 25

ஆருப் பிழையுமெண்ணு தாயிரங்கண் ஈந்தானே
மாருனே யார்பெரியர் வள்ளுவரே—கூறிற்
செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரியசெய்கலா தார். 26

யானே உலகமெலாம் ஆயினேன் என்றுகண்ணன்
வானறியச் சொற்றதென்கொல் வள்ளுவரே—காணில்
சுவைஒளிஊறு ஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு, 27

பேதைப் பருவப் பிருதையுங் கண்டதென்கொல்
மாதவத்தோன் தன்பெருமை வள்ளுவரே—ஓதின்
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 23

கோனுக முன்சசிபாற் சென்றுேன் குறுகாமே
மாநாகம் ஆகியதென் வள்ளுவரே—ஆனுக்
குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது. 29

கொற்றச் சடபரதன் செய்யான் குலவினைதான்
மற்றந் தணனுமோ வள்ளுவரே—முற்றவே
அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். 30

நான்காம் அதிகாரம்

அறன் வலியுறுத்தல்

செங்கோல் அரசாய்ப்பின் சேர்ந்தார் கயிலையினும்
மங்காத சேரர்கோன் வள்ளுவரே—பொங்கும்
சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்
காக்கம் எவனே உயிர்க்கு. 31

கீரனும்பூ தத்தாற் சிறைப்பட்டான் கீழ்மைஎலி
வார்அரசாய் மாறியதென் வள்ளுவரே—தேரின்
அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு. 32

பன்னும்உழ வாரப் பணியும் புரிந்ததென்னே
மன்னுதமிழ் நாவரையர் வள்ளுவரே—உன்னுங்கால்
ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல். 33

காலால் மிதித்தாலுங் கண்ணப்பர் செய்பூசை
வாலிதெனச் சொல்வதென்னே வள்ளுவரே—சாலும்
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. 34

வேள்வியற மேபுரிந்தும் விண்பரவு தக்கற்கு
மாள்வினையா யிற்றென்னே வள்ளுவரே—மீளா
அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். 35

பார்த்தனம்பால் வீழ்பொழுதும் பார்அளந்தா னுக்குநெய்த்தோர்
வார்த்தளித்தான் கன்னனறம் வள்ளுவரே—வாய்த்தக்கால்
அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 36

இல்லம் பொருளிவால் ஏனையறம் துன்புறலால்
வல்ல எனிற்பயனென் வள்ளுவரே—சொல்லால்
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. 37

பார்க்கண் பிறவார் பதினா றகவையொடு
மாக்கண்டர் வாழ்வதென்னே வள்ளுவரே—நோக்கியே
வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 38

காடுசென்றும் இன்புற்றார் கௌந்தேயர் கௌரவரோ
வாடினார் நாடுகொண்டும் வள்ளுவரே—நாடின்
அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில. 39

என்தலைநீ கொள்க எனக்குமணன் வாள்கொடுத்தும்
வன்தலைகொள் ளார்சாத்தர் வள்ளுவரே—என்றும்
செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி. 40

ஐந்தாம் அதிகாரம்

இல்வாழ்க்கை

இன்னுயிரே அன்ன இராமனைக் கோசிகன்பால்
மன்னன் விடுத்ததென்னே வள்ளுவரே—உன்னுங்கால்
இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. 41

கன்னிபங்கன் செய்தான் களத்தவிந்த வல்லாள
மன்னற்கி மக்கடன்முன் வள்ளுவரே—என்னே
துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 42

ஆறில் ஒருபங் கரசன் பெறுகஎன
மாறிலார் சொற்றதென்கொல் வள்ளுவரே—கூறுங்கால்
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை. 43

பாண்டுவழி நிற்பப் பரந்தமுன் னோன்வழிகள்
மாண்டொழிந்த தென்கொலோ வள்ளுவரே—யாண்டும்
பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

பாலர்க்கே போதா உணவும் பகுத்துண்டார்
மாலில் குசேலரன்பால் வள்ளுவரே—சீலமென்னே
அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

முன்னி வனம்புகுதார் மூதறிவி னோர்மிதுலை
மன்னன் முதலோர்தாம் வள்ளுவரே—என்னே
அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன். 46

சந்திரசே னன்தவத்தால் செய்யா தனசெய்தான்
மைந்துடன்இல் வாழ்தருமன் வள்ளுவரே—முந்தும்
இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை. 47

கன்னன் உயிர்காக்கும் கவசமும்ஈந் தான்வசிட்டன்
மன்இரந்தும் தந்திலனால் வள்ளுவரே—உன்னுங்கால்
ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. 48

காமநுகர் இல்லறமோ காட்டிலுறும் அவ்வறமோ
வாய்மையினாய் வார்க்குயர்வு வள்ளுவரே—தோமில்
அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. 49

கண்ணனிரா மன் முதலம் காவலரைத் தெய்வமென
மண் ணுளோர் எண்ணுவதென் வள்ளுவரே-எண்ணுங்கால்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். 50

ஆரும் அதிகாரம்

வாழ்க்கைத் துணைநலம்

நாடிமுந்துங் கூலிகொண்டு நல்ல புரூரவன்இல்
வாடாது வாழ்ந்தனளே வள்ளுவரே—நாடின்
மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 51

வானோர் குரவனுமுன் வாழ்க்கைசிதை வுற்றுநொந்தான்
மானேர் விழிமனையால் வள்ளுவரே—ஆனு
மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 52

நெய்தும் இனிதுற்றீர் நீயிர் யயாதிவெள்ளி
வைதசா பம்பெற்றான் வள்ளுவரே—வையத்துள்
இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. 53

ஆதப் புலேச்சியென அன்றறிந்தும் நும்தாயை
மாதவத்தோன் கொண்டதென்கொல் வள்ளுவரே—ஈதடுக்கும்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 54

முன்னரந குயைமழை மூவர் தடுப்பவும்நா
வன்மையாற் பெய்வித்தாள் வள்ளுவரே—உன்னியே
தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. 55

அங்கத் துடன்சோ றருந்தியநா ளாயனிதன்
மங்கலநா ணும்காத்தாள் வள்ளுவரே—மங்காது
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 56

மேன்மாடம் விட்டு வெளிச்சென் றிரவிலொரு
மான்மாய ஔவைகண்டாள் வள்ளுவரே — ஊன்மேல்
சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலே. 57

ஈண்டும் விசும்பும் இசைபாடக் கண்ணகிதான்
மாண்டவற்பெற் றும்பருற்ருள் வள்ளுவரே—மாண்டவத்தால்
பெற்ருற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. 58

விக்கிரமார்க் கற்குமுன்னேன் வேத்தியல்விட் டானில்லாள்
வக்கிரமார்க் கந்தன்னுல் வள்ளுவரே — தக்க
புகழ்புரிந்த இல்இலோர்க் கில்லே இகழ்வார்முன்
ஏறுபோற் பீடுநடை. 59

அங்கயற்கண் மாதால் அரனுமெழில் உக்கிரனல்
மங்கையும் மேன்மையுற்ருர் வள்ளுவரே—மங்காத
மங்கலம் என்ப மனேமாட்சி மற்றதன்
ன்கலம் நன்மக்கட் பேறு. 60

ஏழாம் அதிகாரம்

மக்கட்பேறு

நுந்தையாம் யாளிதத்தர் நோன்பென்னே நும்முதலாம்
மைந்தரெழு வர்ப்பெற்ருர் வள்ளுவரே—முந்தப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லே அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 61

நிரயம் நீங்கிச் சிறந்தார் இறந்தாரும்
வானிற் பகிரதனல் வள்ளுவரே—ஏனே
எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 62

மேனுள் அறன்மகன்செய் வேள்வியால் உள்மகிழ்ந்தான்
வானு டுறுபாண்டு வள்ளுவரே—ஆனுத
தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினேயான் வரும். 63

செய்ய குசேலருந்தம் சேய்களொடு புன்கூழை
வையத் துவந்துண்டார் வள்ளுவரே—துய்ய
அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 64

தன்னைப் பழித்தமக்கள் தம்மைக்கண் டின்புற்றான்
மன்னுநளன் அட்டிற்கண் வள்ளுவரே—உன்னியக்கால்
மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு. 65

கல்லுமுரு குங்குழலிற் கண்ணன் மழலையே
வல்லதின்பம் நந்தர்க்கு வள்ளுவரே—சொல்லில்
குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். 66

எந்தைதொல் காப்பியனை என்னோ சமதங்கி
வந்தமுனி பாற்கொடுத்தான் வள்ளுவரே—சிந்திப்பின்
தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 67

தன்னேர் வனசரன்சீர் தாங்காக் கிரீடிதற்கொல்
மன்னுசுதற் கண்டுவந்தான் வள்ளுவரே—என்னேயோ
தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 68

வேதப் பொருளுரைத்தான் வேளரனார்க் கென்னலுமே
மாதுமையாள் மிக்குவந்தாள் வள்ளுவரே—ஓதுங்கால்
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். 69

இன்னுதவி செய்யா திராமன் தனைப்பெற்ற
மன்னிறப்பக் காடுறலென் வள்ளுவரே—முன்னே
மகன்றந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனுஞ் சொல். 70

எட்டாம் அதிகாரம்

அன்புடைமை

தேராருந் தாமுணரக் கன்னன் சிதைந்தகளன்
வாரா அழுதாளே வள்ளுவரே—சூரன்பெண்
அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 71

யார்க்காம் இவறியான் செல்வம் இகல்வெல்ல
மாற்களித்தான் என்புமுனி வள்ளுவரே—பார்க்குங்கால்
அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 72

மான்பிறப்பில் எல்லாம் உணர்ந்துமன்பு வாய்ப்பமக்கள்
வான்பிறப்புற் றுன்பரதன் வள்ளுவரே—வான்புகழும்
அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. 73

தாய்சொற்றுந் தம்பியர்பால் சாரா தராக்கொடியோன்
வாய்நண்பு மிக்கானே வள்ளுவரே—தூயகன்னன்
அன்பீனு மார்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 74

சிறறின்பம் நீங்கினர்க்கே பேரின் பெனச்சொலுநூல்
மற்றிரண்டும் நீயிருற்றீர் வள்ளுவரே—எற்றுனே
அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு. 75

நொந்துழி அன்புடையார் நோனுர் எனிற்பெற்றோர்
மைந்தரைத்தண் டித்தலென்னே வள்ளுவரே—முந்தும்
அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 76

தேவருந்தான் தொட்டால் சிதையவரம் பெற்றானம்
மாவரந்தன் னல்மடிந்தான் வள்ளுவரே—தாவியே
என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம். 77

மாய்ந்தோர் உயிர்க்கும் மறைபெற்றும் வீரரொடு
மாய்ந்தான் சுயோதன னும் வள்ளுவரே—ஆய்ந்தக்கால்
அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று, 78

ஏவல் இடம்பொருள்கள் யாவுமிருந் தென்மன்னன்
மாவிருந்தே லான்கண்ணன் வள்ளுவரே—மேவாப்
புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு. 79

தான்பெற்ற நாகர்பொய் சாற்றுமை யாற்சபித்த
மான்பொன்றுக் காரணமென் வள்ளுவரே—ஊன்பெற்றல்
அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு. 80

ஒன்பதாம் அதிகாரம்

விருந்தோம்பல்

வித்தும்அரித் திட்டு விருந்தோம்பி னார்மாறர்
வைத்தபொருள் போயபின்னும் வள்ளுவரே—மொய்த்தே
இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 81

நீடுவா மூச் செய்யும் நெல்லிக் கனிஅதிகன்
வாடாதெள வைக்கிந்தான் வள்ளுவரே—நாடில்
விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 82

பல்லா யிரவர்க்கூண் பாண்டு மகன்படைத்தான்
வல்லாத காட்டிலும்போய் வள்ளுவரே—சொல்லின்
வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 83

வந்ததுரு வாசற்கு மாவிருந்து செய்தமையால்
மைந்துற்றான் மாயோனும் வள்ளுவரே—நந்தா
தகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல். 84

தீய்ந்தும் புலமெல்லாம் தேர்ந்துலவாக் கோட்டையினல்
வாய்ந்தவிருந் தோம்பினர் வள்ளுவரே—ஆய்ந்தொருவர்

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான்புலம். 85

புன்புருத் தம்மில் புகுவேடற் கீந்துடலை
மன்புலவர் நாடுசென்ற வள்ளுவரே—என்பெருமை
செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 86

ஆவின்பால் ஈந்துவித்தி யாரணியர்க் காத்தோன்பின்
மாவேந்த னுய்வாழ்ந்தான் வள்ளுவரே—நாவால்
இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 87

பன்னகர்தா மேயுண்பான் ஓம்பிப் பறவைகொணர்
மன்னமிழ்தம் முன்னிழந்தார் வள்ளுவரே—என்னே
பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 88

என்னும் பொருள்பெற்றும் ஔவைக் கிடாள்சோறு
மன்னுமொரு வன்மனையாள் வள்ளுவரே!—உன்னில்
உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 89

பண்டறிவால் வந்துநொந்தான் பாஞ்சாலன் முன்மறைதேர்
வண்டார்த் துரோணனும் வள்ளுவரே—கொண்டபின்
மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 90

பத்தாம் அதிகாரம்

இனியவை கூறல்

தன்நாட்டில் செம்பாதி சாமமுனிக் கீவலென்றோர்
மன்நாட்டல் இன்சொல்லோ வள்ளுவரே—முன் நாட்டின்
இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91

முன்பரவான் இன்சொல் மொழிந்து களப்பலிக்கு
மன்பால் உடன்பட்டான் வள்ளுவரே—இன்பால்
அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின். 92

மாதவரைச் சூதால் வருத்தி விருந்தளித்தான்
வாதாவி இஃதறமோ வள்ளுவரே—தீதே
முகத்தால் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொல் லினதே அறம், 93

நாடு கரந்துறையும் நாளும் நடுவன்சேய்
வாடா தினிதுறைந்தான் வள்ளுவரே—கேடுற்றுத்
துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94

ஏழை ஒருவன் இராமா என அழைப்ப
வாழியப்பா என்ருன்மால் வள்ளுவரே—சூழின்
பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 95

சூதமுனி என்றுந் துயர்நீங்கு சொற்கொண்டுண்
மாதவர்க்குச் சொல்லியதென் வள்ளுவரே—ஓதுங்கால்
அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 96

செய்யாது செய்தான்போல் தோற்றுதிருக் கோளென்ருன்
வையத் தறன்மைந்தன் வள்ளுவரே—மெய்யே
நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பில் தலைப்பிரியாச் சொல். 97

குற்றமுடை யார்யார் கூறுகெனக் குந்திமகன்
மற்றியாரு மில்லென்ருன் வள்ளுவரே—முற்றும்
சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். 98

எல்லாருந் தற்புகழ இன்புற்ருேன் நிந்தித்தான்
வல்லான் விதுரனைமுன் வள்ளுவரே—சொல்லுள்
இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 99

சீலம் பலஇருப்பத் தேராச் சிசுபாலன்
மாலினிழி பேசொற்ருன் வள்ளுவரே—தாலத்
தினிய உளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100

வள்ளுவர் நேரிசை

முற்றும்.

குறிப்புரை

1. கடவுள் வாழ்த்து

1 இப்பாட்டின்கண் இறைவி இறைவனுடைய திருக் கண்களை மூடிய செய்தி கூறப்பட்டது. மாசற்றார் - குற்ற மற்றவர்கள்.

2 இப்பாட்டில் நான்முகன் இறைவனை இகழ்ந்து ஒரு தலையை இழந்த செய்தி கூறப்பட்டது. மால்மகனார் - நான்முகன். நூல் முற்ற - எல்லா நூல்களையும். வாலறிவன்- மெய்யறிவையுடைய கடவுள்.

3 ஏனோர் - மற்றையவர். தமிழ்மாமுனி - அகத்தியர். மாணடி - பெருமை பொருந்திய திருவடி.

4 இப்பாட்டில் திருநாவுக்கரசர் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலிலிருந்து கரையேறிய செய்தி கூறப்பட்டது. நாவரையர் - திருநாவுக்கரசர். வல்லே - விரைவாக. இடும்பை - துன்பம்.

5 இப்பாட்டில் சண்டேசுரர் என்னும் விசார சருமர் செய்தி கூறப்பட்டது. தந்தையார் - எச்சதத்தர். மைந் தர் - விசாரசருமர். சாராமை - அடையாமை. நந்தும் - மிகுந்து வருத்துகின்ற.

6 இப்பாட்டில் சாக்கிய நாயனார் கல்லெறிந்து வீடு பெற்ற செய்தி கூறப்பட்டது. சீர் உரைத்தல் - புகழைப் பேசுதல். பொறி வாயில் - ஐம்பொறிகளாகிய வழி.

7 இப்பாட்டில் தாருகாவன முனிவர்களின் கதை கூறப்பட்டது. வண்தாருகாவனத்தார் - வளப்பம் பொருந் திய தாருகாவன முனிவர்கள்.

8 இப்பாட்டில் சூரபத்மனுடைய கதை கூறப்பட்டது. ஆயிரத்தெட்டண்டம் அரசாண்டான் - சூரபத்மன். வெஃகி யது - விரும்பியது. மாயாச்சுரர்பதி - அழியாத தேவர் உலகம். அறவாழி யந்தணன் - கடவுள்.

9 இப்பாட்டில் தக்கன் சிவபிரானை யிகழ்ந்து வேள்வி செய்து ஆட்டுத்தலை பெற்ற செய்தி கூறப்பட்டது. தீர்த் தர் - தூய பெரியோர்கள். சிறுவிதி - தக்கன்.

10 இப்பாட்டில் இரணியனுடைய கதை கூறப்பட்டது. சாயா இரணியன் - தோல்வியடையாத இரணியன். இளம் சேய் - பிரகலாதன். மாயா நல்வாழ்வு - கெடாத நல்ல வீடு பேறு.

2. வான்சிறப்பு

11 மாய்ந்தன - அழிந்தன. வாய்ந்த மருந்து - பொருந்திய அமுதம். வழி வழித் தோன்றல் - என்றும் அழியாது தொடர்ந்து தோன்றுதல்.

12 ஊண் - உணவு. உயர்வானம் - சிறந்த மழை. துப்பார்க்கு - உண்பவர்கட்கு. துப்பு ஆய - நன்மையாகிய. துப்பு ஆக்கி - உணவுப் பொருள்களை உண்டாக்கி. துப்பாயதும் - தானும் உணவாக இருப்பதும்.

13 நோலாது - பொறுக்காமல். மூலம் - கிழங்கு. விரிநீர் – கடல். உடற்றும் - வருத்தும்.

14 இப்பாட்டில் இடைக்காட்டுச் சித்தர் கதை கூறப்பட்டது. காடன் - இடைக்காடர். எயில் ஆக்கியது – சுவர் வைத்தது. வாரி - வருமானம்.

15 சின்னாடு - சில நாடுகள். வற்கடம் - பஞ்சம். பன்னாடு - பல நாடுகள். மன்னி வளர்தல் - நிலைபெற்று ஓங்குதல். உள்ளில் - எண்ணிப் பார்த்தால்.

16 இப்பாட்டில் தண்டகனுடைய நாடு காடான கதை கூறப்பட்டது. கானல் மண்டு சுரம் - வெப்பம் மிகுந்த பாலைவனம். தண்டா - நீங்காத. விசும்பின் துளி - மழைத் துளி.

17 மீனீர் – மீனும் நீரும். மாநிலம் - பெரிய உலகம். ஆனா - அழியாத. தடிந்து - முகந்து. எழிலி - முகில்.

18 பாண்டியன் ஒருவன் வற்கட காலத்தில் தன்னிடமிருந்த புலவர்களை வேறிடங்கட்கு அனுப்பிய செய்தி இப்பாட்டிற் கூறப்பட்டது. தள்ளாப் புலவரை - தள்ளக் கூடாத புலவர்களை. வள்ளல் - பாண்டியன். விள்ளில் – சொல்லுமிடத்து. வறக்குமேல் - பெய்யாதானால்.

19 இப்பாட்டில் விசுவாமித்திரர் நாயூனைக் களவு செய்து தின்னத் தொடங்கிய கதை கூறப்பட்டது. வீதல்

உறு - இறந்த. விண்ணும் படைக்கவல்ல - தேவருலகையும் உண்டாக்கக் கூடிய. மாதவத்தோன் - விசுவாமித்திரர்.

20 இப்பாட்டில் பாண்டியன் ஒருவன் இந்திரனிடம் மழை பெய்யவேண்டுமெனக் கேட்கும் பொருட்டுச் சென்ற செய்தி கூறப்பட்டது. பெட்டான் - விரும்பினான். உய்ய - பிழைக்குமாறு.

3. நீத்தார் பெருமை

21 நாரதரைத் திருமால் போற்றிய கதை இப்பாட்டில் கூறப்பட்டது. புண்டரிகத்தாளார் புதல்வர் - தாமரை மலரில் வாழும் நான்முகனுடைய புதல்வராகிய நாரதர். அடிப்போது - திருவடித் தாமரை. மண் தின்ற மால் - உலகை விழுங்கிய திருமால். தண்டா - நீங்காத.

22 இப் பாட்டில் இறைவன் சுந்தரமூர்த்தியார் பொருட்டுப் பரவையாரிடந் தூது சென்ற கதை கூறப்பட்டது. பரவை உழை - பரவையிடத்தில். கண்ணுதல் - சிவபெருமான். துணை - அளவு.

23 இப் பாட்டில் வசிட்ட முனிவரிடத்தில் அரசன் ஒருவன் தோல்வியடைந்த செய்தி கூறப்பட்டது. தன்னந் தனி - வேறு துணையில்லாத தனிமை. தானை - படை. கோசிகர் - விசுவாமித்திரர். மன்னர்கோன் - முன்னர் அரசனாக விருந்த விசுவாமித்திரர். உன்னின் - எண்ணினால். பிறங்கிற்று - விளங்கியது.

24 தேவருலகத்திற்குச் சென்ற அர்ச்சுனன் அங்குத் தன்னை விரும்பி வந்த ஊர்வசியை வெறுத்தொதுக்கியமை இப் பாட்டிற் கூறப்பட்டது. ஐந்தருவாழ் மங்கை—ஊர்வசி. நந்தா - குறையாத.

25 இப்பாட்டில் இந்திரன் அகலிகையிடம் வஞ்சகமாகச் சென்று உடல் முழுவதும் பெண் குறி பெற்றமை கூறப்பட்டது. ஒன்னார்த் தெறற்கும் — பகைவரை யழித்தற்கும். சாலுங்கரி - போதிய சாட்சி.

26 ஆருப்பிழை-பொறுத்தற்கரிய பிழை. மால்தானோ- திருமாலோ. ஆயிரங்கண் ஈந்தான் - கௌதம முனிவர். செய்கலாதார் . செய்ய முடியாதவர்.

27 கண்ணபிரான் அருச்சுனனுக்குப் பகவத் கீதையை உரைத்தருளியபோது யானே எல்லாமாவேன் என்றுரைத்த

செய்தி கூறப்பட்டது. வானறிய - தேவர்களறிய. ஊறு - உணர்ச்சி. தெரிவான் கட்டு - ஆராய்வான் கண்ணது.

28 குந்திதேவி தன்னுடைய இளம்பருவத்தில் துருவாசருடைய பெருமையை உணர்ந்து தொண்டு செய்த கதை இங்குக் குறிக்கப்பட்டது. பிருதை - குந்திதேவி. மாதவத் தோன் - துருவாசர். நிறைமொழி மாந்தர் - நிறைந்த பயனமைந்த மொழிகளைப் பேசும் முனிவர்கள்.

29 இப் பாட்டில் நூறுவேள்வி முடித்துத் தேவருலகடைந்த நகுடன் இந்திராணியிடம் விரைந்து செல்லக் கருதி அகத்திய முனிவர் வசவுரையால் பாம்பாகப் போன கதை கூறப்படுகிறது. கோன் ஆக - தேவேந்திரனாக. சசி - இந்திராணி. மாநாகம் - பெரிய பாம்பு.

30 இப்பாட்டில் சடபரதர் மானிடத்தில் பற்றுவைத்தமை கூறப்படுகிறது. கொற்றம் - வெற்றி. ஆனா - நீங்காத. கணமேயும் - ஒருகணப் பொழுதாவது.

4. அறன் வலியுறுத்தல்

31 இப்பாட்டில் சேரமான் நாயனாருடைய கதை கூறப்படுகிறது. மங்காத - சீர்த்தியில் குறைவுபடாத. சேரர் கோன் - சேரமான் பெருமாள் என்னும் கழறிற்றறிவார்.

32 இப்பாட்டில் நக்கீரதேவர் சிவபூசையில் தவறிப் பூதத்தால் சிறைப்பட்ட செய்தி கூறப்பட்டது. எலி மாபலிச் சக்கரவர்த்தியானதுங் கூறப்பட்டது. வார் அரசு- பெரிய அரசு.

33 இப்பாட்டில் திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணி கூறப்பட்டது. பன்னும் - சொல்லப் பெறுகிற. உழவாரப் பணி - உழவாரப் படையினால் புல்லைச் செதுக்குதல். மன்னு தமிழ் — நிலைபெற்ற தமிழ். ஒல்லும் வகை - முடிந்த அளவு. ஓவாது - ஒழியாமல்.

34 இப்பாட்டில் கண்ணப்பர் காளத்தி யிறைவனை வழிபட்ட செய்தி கூறப்பட்டது. காலால் மிதித்தாலும் - நிருமாலியத்தைக் காலால் அகற்றினாலும். வாலிது-தூயது. ஆகுலநீர - ஆடம்பரத் தன்மையோடு கூடியன.

35 இப்பாட்டிலும் தக்கன் வேள்விசெய்த செய்தி கூறப்பட்டது. விண்பரவும் - தேவலோகத்திலுள்ளார் வணங்கும். மாள்வினை - சாவுக்குக் காரணமாகிய தொழில். அழுக்காறு - பொறாமை.

36 இப்பாட்டில் கன்னன் போர்க்களத்தில் நல்வினையைத் தானஞ் செய்த கதை கூறப்பட்டது. பார்த்தன் - அருச்சுனன். பார் அளந்தான் - திருமால். நெய்த்தோர் - இரத்தம். வாய்த்தக்கால் - சமயம் வாய்த்தபொழுது. பொன்றுங்கால் - சாவும்போது. பொன்றாத்துணை - அழியாத துணை.

37 இல்லம் - இல்லறம். ஈவால் - கொடுப்பதால். துன்புறலால் - வருத்தப்படுதலால். வல்ல - வலிமையொடு சிறந்தவை. அறத்தாறு - தருமத்தின் பயன். ஊர்ந்தான் - ஏறிச் செலுத்துபவன்.

38 இப்பாட்டில் மார்க்கண்டேயர் கதை கூறப்பட்டது. பார்க்கண் - நிலத்தில். பதினறகவை - பதினாறாண்டு. வீழ்நாள் - வீணாகக் கழியும் நாள். வாழ்நாள் வழியடைத்தல் - பிறவாமற் செய்தல்.

39 இப்பாட்டில் பாண்டவர் காட்டிலும் இனிது வாழ்ந்த செய்தி கூறப்பட்டது. கௌந்தேயர் - குந்தி மக்கள். கௌரவர் - துரியோதனனும் அவனுடன் பிறந்தார்களும்.

40 இப்பாட்டில் குமணன் தன் தலையை அறுத்துக் கோடற்குச் சாத்தர்க்கு வாள் கொடுத்த செய்தி கூறப்பட்டது. வன்தலை-வலிய தலை. சாத்தர்-பெருந்தலைச் சாத்தனார். உயற்பாலது - ஒழிக்கத்தக்கது.

5. இல்வாழ்க்கை

41 இப்பாட்டில் தசரத மன்னன் இராமனை விசுவாமித்திரரோடு அனுப்பிய செய்தி கூறப்பட்டது. அன்ன - போன்ற. கோசிகன் - விசுவாமித்திரன். நல்லாறு - நல்லொழுக்க வழி.

42 இப்பாட்டில் வல்லாள மன்னனுக்கு இறைவன் இறுதிக்கடன் செய்த கதை கூறப்பட்டது, கன்னிபங்கன் - இறைவன். களத்தவிந்த - போர்க்களத்தில் இறந்த. துவ்வாதவர் - வறிஞர்.

43 மாறிலார்-குற்றமற்ற பெரியோர்கள். சொற்றது - சொன்னது. தென்புலத்தார் - பிதிர்த்தேவதைகள். ஒக்கல் - சுற்றத்தார். ஐம்புலத்து - ஐந்திடத்தும்.

44 வழி - வழிமுறை. முன்னோன் - திருதராட்டிரன். யாண்டும் - எப்பொழுதும். பாத்து - பங்கிட்டு. ஊண் - உண்ணுதல். எஞ்சல் - குறைதல்.

45 இப்பாட்டில் குசேலருடைய கதை கூறப்பட்டது. பகுத்து - பங்கிட்டு மால் இல் - மயக்கம் நீங்கிய.

46 இப்பாட்டில் சனகர் இல்லத்திலிருந்தவாறே மெய்யறிவாளராக விளங்கிய செய்தி சுட்டப்பட்டது. முன்னி - ஆராய்ந்து. மிதுலை மன்னன் - சனகன். அறத்தாற்றின் - தரும வழியில். புறத்தாற்றில் - புறம்பான வாழ்க்கையில்.

47 இப்பாட்டில் துறவியாகவிருந்த சந்திரசேனன் இல்லறத்தானாக விருந்த தருமன் என்னும் இருவருடைய செய்தி கூறப்பட்டது. துறவியாகவிருந்த சந்திரசேனனால் செய்யமுடியாத காரியத்தையும் இல்லறத்திலிருந்த தருமன் செய்து முடித்தான். மைந்துடன் - வலிமையோடு.

48 இப்பாட்டில் கன்னன் கவசங் கொடுத்த செய்தியும் வசிட்டர் காமதேனுவைக் கொடுக்க மறுத்த செய்தியுங் குறிப்பிடப்பட்டன. உன்னுங்கால் - எண்ணுமிடத்து. ஒழுக்கி - நடத்தி. நோன்மை - பெருமை.

49 ஆய்வார்க்கு - ஆராய்ந்து பார்ப்பவர்கட்கு. தோம் - குற்றம்.

50 மண்ணுளோர் - நிலவுலகினர். வையம் - உலகம்- தெய்வத்துள் வைக்கப்படும் - தேவருள் ஒருவனாகவைக்கப் பெறுவான்.

6. வாழ்க்கைத் துணைநலம்

51 இப்பாட்டில் புரூரவச் சக்கிரவர்த்தியினுடைய கதை கூறப்பட்டது. கூலிகொண்டு - வேலை செய்த கூலியின் வருவாயைக்கொண்டு. மாண்புடையள் - நற்குண நற்செயல்களை யுடையவள். வளத்தக்காள் - வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்பவள்.

52 இப்பாட்டில் சந்திரன் பிரகஸ்பதியின் மனைவியான தாரையைக் கவர்ந்துசென்ற கதை குறிக்கப்பட்டது. வானோர்குரவன் - தேவகுரு; பிரகஸ்பதி. ஆனா - நீங்காத. மனைமாட்சி - இல்லறத்திற்கு வேண்டிய நற்சிறப்புக்கள். என எவ்வளவு.

53 இப்பாட்டில் திருவள்ளுவர் செய்தியும் யயாதி வெள்ளிவைத சாபம் பெற்ற கதையுங் கூறப்பட்டன.

நெய்தும் - நெய்தல் தொழிலைச் செய்தும். இனிதுற்றீர் - மேன்மையடைந்தீர்கள். நீயிர் - நீங்கள்: வெள்ளி-சுக்கிரன். இல்லது என் - இல்லாத பொருள் என்ன? இல்லவள் - மனையவள். மாணுக்கடை - மாட்சியில்லாத கடைப்பட்டவளாக விருந்தால்.

54 இப்பாட்டில் பகவன் ஆதிப்புலைச்சியை மணம் புரிந்த செய்தி கூறப்பட்டது. மாதவத்தோன் - யாளிதத்தன். ஈதடுக்கும் - இது பொருந்தும். பெருந்தக்க - உயர்வாகிய பொருள். திண்மை - உறுதி.

55 இப்பாட்டில் அநசூயை மழை பெய்வித்த கதை கூறப்பட்டது. மூவர் - சிவன், திருமால், நான்முகன். அநசூயை - அத்திரி முனிவரின் மனைவி. நாவன்மையால் - சொல்வன்மையால். உன்னி - நினைந்து.

56 இப்பாட்டில் கற்பரசியாகிய நளாயனியின் கதை கூறப்பட்டது. அங்கத்துடன் - உடலுறுப்பின் துர்நீர் முதலியவைகளோடு. நளாயனி - மௌத்கல்ய முனிவரின் மனைவி. மங்கலநாண் - தாலி. தற்காத்து - கற்பினால் தன்னைக் காத்துக்கொண்டு. தற்கொண்டான் - கணவன். தகைசான்ற - நன்மையமைந்த. சோர்வு - தளர்ச்சி.

57 இப்பாட்டில் ஏலங்குழலாள் ஏமாந்த கதை உரைக்கப்பட்டது. மான் - மான் போன்ற சாயலையுடைய ஏலங்குழலாள். ஊன் - உடல். சிறை - கட்டுக்காவல். நிறை - கற்பு.

58 இப்பாட்டிற் கண்ணகி மாண்டு தன் கணவனை யடைந்த கதை கூறப்பட்டது. ஈண்டு - இவ்வுலகம். விசும்பு - தேவலோகம். மாண்டவன் - மாண்டுபோன கணவனாகிய கோவலன். மாண்தவம் - சிறந்த தவம். புத்தேளிர் - தேவர்கள்.

59 இப்பாட்டில் மனைவியின் தீய நடத்தையைக் கண்டு வெறுப்புற்றுத் துறவு பூண்ட பர்த்துருகரியின் கதை கூறப்பட்டது. விக்கிரமார்க்கற்கு முன்னோன் - பர்த்துரு ஹரி. வேத்தியல் - அரசாளும் தன்மை. வக்கிரமார்க்கம் - தீய வழி. புகழ் புரிந்த - புகழை விரும்பிய. இல் - மனைவி. ஏறு - ஆண் சிங்கம். பீடுநடை - பெருமித நடை.

60 அங்கயற்கண் மாது - மதுரை மீனாட்சி. அரன் - சிவபெருமான். எழில் உக்கிரன் - அழகிய உக்கிர குமார பாண்டியன். மங்கை - மீனாட்சி. மங்காத - சிறப்புக் குறையாத.

7. மக்கட்பேறு

61 நுந்தை - உம்முடைய தந்தை. நோன்பு – விரதம். நும்முதலாம் - உங்களை முதலாகக் கொண்ட. அறிவு அறிந்த - அறிய வேண்டியவைகளையெல்லாம் நன்குணர்ந்த.

62 இப்பாட்டில் பகீரதன் கங்கை கொண்டுவந்த கதை குறிக்கப்பட்டது. தீ நிரயம் - கொடிய நிரயம். வானில் - விண்ணுலகத்தில். பழிபிறங்கா - பிறரால் பழிக்கப்படாத.

63 தருமர் வேள்வி செய்தபடியால் பாண்டு நற்கதியடைந்த செய்தி இதிற் குறிக்கப்பட்டது. அறன் மகன் - தருமன். மேனாள் - முன்னாள். வான் நாடு உறு - விண்ணுலகு சேர்ந்த. ஆனாத - நீங்காத.

64 இப்பாட்டிற் குசேலருடைய கதை குறிக்கப்பட்டது. செய்ய - செம்மையுடைய. சேய்கள் - பிள்ளைகள். புன்கூழ் - கடைப்பட்ட கூழ். வையத்து - உலகத்தில். துய்ய - தூய்மையான. ஆற்ற-மிகவும். அளாவிய-அளைந்த.

65 நளன் தன்னைப் பழித்துரைத்த மக்களைக் கண்டு இன்புற்ற கதை இதனிற் குறிக்கப்பட்டது. அட்டிற்கண் - மடைப்பள்ளியில். உன்னியக்கால் - எண்ணும்பொழுது.

66 கண்ணன் மழலைச் சொல்லைக்கேட்டு நந்தகோபர் மகிழ்ந்த செய்தி இதனிற் குறிக்கப்பட்டது. வல்லது இன்பம் - இன்பம் தரவல்லது. நந்தர் - நந்தகோபர்; கண்ணனுடைய வளர்ப்புத் தந்தை. குழல்-புல்லாங் குழலின் இசை. யாழ் - வீணையின் இசை.

67 தொல்காப்பியர் கல்வி கற்கச் சென்ற செய்தி இதிற் குறிக்கப்பட்டது. எந்தை-எம் தந்தையைப் போன்ற. சமதங்கி - சமதக்நி முனிவர். வந்தமுனி - தன்னிடம் வந்த அகத்திய முனிவர். அவையத்து-கற்றோர் சபையில்.

68 அருச்சுனன் ஏகலைவனிடத்தில் பொறாமை கொண்ட கதையும் மகனோடு போரிட்ட கதையும் இதனிற் சுட்டப்பட்டன. தன்னேர் - தனக்கு ஒப்பாக. வனசரன் - வேடன். சீர்தாங்கா - சிறப்பைக் கண்டு பொறுக்காத. கிரீடி - இந்திரன் சூட்டிய முடி புனைந்தவன். தற்கொல் - தன்னைக் கொலை செய்த. சுதன் கண்டு உவந்தான் - மகனைக் கண்டு மகிழ்ந்தான். மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்கள்.

69 முருகக் கடவுள் சிவபிரானுக்குப் பிரணவப் பொருள் உரைத்த கதை இதனிற் சுட்டப்பட்டது. வேள் - முருகக் கடவுள். மாதுமையாள் - உமாதேவி. மிக்குவந் தாள் - மிகுதியாக மகிழ்ந்தாள். ஈன்ற பொழுதில்-பெற்ற பொழுதைக் காட்டிலும்.

70 இப்பாட்டில் இராமபிரான் காட்டிற்குச் சென்ற செய்தி குறிக்கப்பட்டது. இன் உதவி - இனிய உதவி. தனைப்பெற்ற மன் - தசரதன். என்நோற்றான் - என்ன தவத்தைச் செய்தான்.

8. அன்புடைமை

71 கன்னன் மாண்டபொழுது குந்தி தேவி போர்க் களத்திற்குச் சென்று வருந்தியழுத செய்தி இதனிற் சுட்டப் பட்டது. தேரார் - அறியாதவர்கள். சிதைந்த களன் — இறந்த போர்க்களம். வாரா - வந்து. சூரன் பெண் - சூரசேனன் மகளாகிய குந்திதேவி. ஆர்வலர் - அன்பர். புன்கண்ணீர் - அற்பக் கண்ணீர். பூசல்தரும் - வெளிப் படுத்தும்.

72 ததீசி முனிவர் இந்திரனுக்கு முதுகெலும்பளித்த செய்தி இப்பாட்டிற் கூறப்பட்டது. இவறியான்-உலோபி. மாற்கு - இந்திரனுக்கு. முனி - ததீசி முனிவர்.

73 சடபரதர் வரலாறு இதில் குறிப்பிடப்பட்டது. மான் பிறப்பில் - மானாகப் பிறந்த பிறப்பில். மக்கள் வான் பிறப்பு - சிறந்த மனிதப் பிறப்பு. பரதன் - சடபரதர். வான்புகழும் - மேலாகப் புகழ்ந்து கூறப்பெறும். இயைந்த - பொருந்துவதற்கு வந்த. வழக்கு - வழியின் பயன். ஆர் உயிர்க்கு - அரிய மனித உயிர்க்கு. குந்திதேவி, கன்னன் தன் னுடைய மகனென அவனிடம் உரைத்துப் பாண்டவர்க ளோடு சேர்ந்து கொள்ளுமாறு கூறியபோது அவன் மறுத்த செய்தி இதனிற் கூறப்பட்டது. தாய் சொற்றும் - தாய் கூறியும். அராக்கொடியோன் - பாம்புக் கொடியை உடைய வனாகிய துரியோதனன். வாய் நண்பு - பொருந்திய நட்பு. நாடாச் சிறப்பு-அளவிடப் பெறாத சிறப்பு.

75 நீயிர் உற்றீர் - நீவிர் அடைந்தீர். எற்றானோ - எதனாலோ? வழக்கு - வழியின் பயன். சிறப்பு - பேரின்பம்.

76 நொந்துழி - வருந்தும்போது. நோனார் - பொறுக்க மாட்டாதவர்கள். முந்தும் - முதன்மையான. மறம் - தீவினை நீக்கத்தின் பொருட்டு விதிக்கப்பெறும் தண்டனை.

77 இச்செய்யுளில் பசுமாசுரனுடைய கதை கூறப்பட்டது. சிதைய - எரிந்தழிய. மாவரம் - சிறந்த வரம். தாவி - பற்றி. என்பில் அதனை - எலும்பில்லாத புழுக்கள் போன்ற உயிர்களை. வெயில் - கதிரவன் வெப்பம். காயும் - வருத்தும். அறம் - அறக் கடவுள்.

78 இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் மந்திரத்தைத் தெரிந்திருந்த துரியோதனன் மாண்ட கதை இதனிற் குறிக்கப்பட்டது. உயிர்க்கும் - பிழைக்கின்ற. மறை - மந்திரம். சுயோதனன் - துரியோதனன். வன்பாற்கண் - கடின நிலத்தில். வற்றல் மரம் - பட்ட மரம். தளிர்த்தற்று - தளிர்த்தாற் போன்றது.

79 துரியோதனனுடைய விருந்தைக் கண்ணபிரான் ஏற்றுக்கொள்ளாத செய்தி இப்பாட்டில் குறிப்பிடப்பட்டது. ஏவல் - வேலைக்காரர். ஏலான் - ஏற்றுக்கொள்ள வில்லை. மேவா - விருப்பில்லாத. இல்லவர்க்கு - இல்லாதவர்க்கு.

80 கத்துரு தம் மக்களாகிய நாகர்கட்கு வசவுரை வழங்கிய செய்தி இதனிற் குறிப்பிடப்பட்டது. நாகர் - பாம்புகள். மான் - மான்போன்ற கத்துரு. பொன்றா - இறவாத. ஊன் - உடல். உயிர்நிலை—உயிர் நிற்கும் உடம்பு.

9. விருந்தோம்பல்

81 இளையான்குடிமாற நாயனார் கதை இப்பாட்டில் கூறப்பட்டது. வித்து — விதை நெல். ஓம்பினார் - போற்றினார். மாறன் - இளையான்குடிமாற நாயனார். மொய்த்து - மிகுதியாக. இருந்து - இல்லறத்தில் இருந்து. ஓம்பி - பொருள்களைப் பாதுகாத்து. வேளாண்மை - உதவி.

82 இப்பாட்டில் அதிகமான் ஒளவைக்கு நெல்லிக் கனியளித்த செய்தி இயம்பப்பட்டது. நீடு - நெடுநாள். அதிகன் - அதிகமான். வாடாது - வருந்தாமல். நாடில் - ஆராயின். புறத்ததா - வீட்டின் வெளிப்புறத்ததாக விருக்க. சாவா மருந்து - அமுதம். வேண்டற்பாற்றன்று - விரும்பத்தக்கதன்று.

83 காட்டில் தருமர் பலருக்கு விருந்திட்ட கதை இப் பாட்டில் குறிக்கப்பட்டது ஊண்-உணவு. பாண்டு மகன் - தருமர். வல்லாத - கொடிய. வைகலும் - நாள்தோறும். பருவந்து - துன்பத்தால் வருந்தி. பாழ்படுதல் - கெடுதல்.

84 இப்பாட்டில் துருவாசருக்குக் கண்ணபிரான் விருந்தளித்த கதை கூறப்பட்டது. மைந்து - வலிமை. மாயோன் - கண்ணன். நந்தா - அழியாத. அகன் அமர்ந்து - மனம் விரும்பி. செய்யாள் - திருமகள்.

85 இப்பாட்டில் அடியார்க்கு நல்லார் என்னுஞ் சிவ னடியார் ஒருவருடைய கதை கூறப்பட்டது. புலம் - வயல். உலவாக் கோட்டை - குறைந்தழியாத நெற்கோட்டை. மிச்சில் - உண்டு எஞ்சியது.

86 இப்பாட்டில் புருக்கள் விருந்தோம்பிய கதை கூறப் பட்டது. புன்புரு - அற்பமான புரு. தம்இல் - தம்முடைய இருப்பிடத்தில். புலவர் நாடு - தேவர் உலகம்.

87 வித்தியாரணியருக்குப் பாலீந்த புக்கணன் என்ப வனுடைய கதை இப்பாட்டில் கூறப்பட்டது. வித்தியாரணி யர்க் காத்தோன் - புக்கணன். இனைத்துணைத்து - இவ்வளவு அளவையுடையது.

88 பறவைகள் கொண்டுவந்த அமுதத்தை நாகர்கள் இழந்த கதை இப்பாட்டில் கூறப்பட்டது. பன்னகர் - பாம்புகள். உண்பான் - உண்ணும் பொருட்டு. மன் அமிழ்தம் - பெருமை பொருந்திய தேவாமுதம். பரிந் தோம்பி - விரும்பிப் பாதுகாத்து.

89 இப்பாட்டில் ஒளவையாருடைய "இருந்து முகந் திருத்தி" என்னும் பாட்டில் வருங் கதை கூறப்பட்டது. உடைமையுள் - பொருளுடையவர்களாக விருக்கும்போது. இன்மை - வறுமை. மடமை. அறிவின்மை. மடவார் - அறிவிலாப் பெண்கள்.

90 இப்பாட்டில் பாஞ்சாலனிடம் துரோணர் ஆவிரந்து வருந்திய கதை கூறப்பட்டது. பண்டறிவால் - முன்னறிந் திருந்தபடியால். வண்தார் - வளப்பம் பொருந்திய மாலை. மோப்ப - மோந்து பார்த்தவுடன். அனிச்சம் - அனிச்ச மலர்.

10. இனியவை கூறல்

91 இப்பாட்டிலும் துரோணரையும் பாஞ்சாலனையும் பற்றிய கதை வருகிறது. செம்பாதி - சரிபாதி. சாமமுனி.

சமாதானத்தை விரும்பும் துரோணர். ஈவல் - கொடுப்பேன். மன் — துருபதன். நாட்டல் - உறுதிமொழி கூறல். ஈரம் அளைஇ - அன்புடன் கலந்து. படிறு - வஞ்சனை.

92 இப்பாட்டில் அரவான் துரியோதனனுடைய களப் பலிக்கு உடன்பட்ட செய்தி கூறப்பட்டது. களப்பலிக்கு - போர்க்களப் பலிக்கு. மன்பால் - துரியோதன மன்னனிடம். இன்பால் - இன்பமுடன். அகனமர்ந்து - மனமகிழ்ந்து. முகனமர்ந்து - முகமலர்ந்து.

93 இப்பாட்டில் வில்வலன் வாதாபி இருவருடைய வஞ்சக விருந்துக் கதை கூறப்பட்டது. வருத்தி - வரவழைத்து. அகத்தானும் - உள்ளத்துடன் கூடிய.

94 இப்பாட்டில் தருமர் காட்டில் இனிது வாழ்ந்திருந்த கதை குறிப்பிடப்பட்டது. கரந்து - மறைந்து. நடுவன் சேய் - தருமர். துன்பு உறாஉம் - துன்பத்தை மிகுவிக்கும். துவ்வாமை - வறுமை.

95 இப்பாட்டில் இராமபிரான் தன்னைப் பெயர் சொல்லியழைத்தவனை அப்பாவென்று உறவு கொண்டாடிய கதை கூறப்பட்டது. மால் - திருமாலின் கூருகிய இராம பிரான். சூழின் - ஆராய்ந்து நோக்கின். அணி - சிறப்பு.

96 சூதமுனி - சூத புராணிகர். மாதவர்க்கு - நைமி சாரணிய முனிவர்கட்கு. அல்லவை தேய - தீவினைகள் குறைய. நாடி - மனத்தால் ஆராய்ந்து.

97 இப்பாட்டில் தருமர் கதை கூறப்பட்டது. செய்யாது - செய்யத்தகாத காரியங்களை. திருக்கோள் - தெய்வத்தாலுண்டாகிய இடையூறு. நயன் ஈன்று - நன்மையைக் கொடுத்து. தலைப்பிரியா - நீங்காத.

98 இப்பாட்டில் தருமருந் துரியோதனனும் தீயவர்களையும் நல்லவர்களையுந் தேடிய கதை கூறப்பட்டது. குந்தி மகன் - தருமர். சிறுமையுள் - துன்பஞ் செய்வதில்.

99 இப்பாட்டில் துரியோதனன் விதுரனை இகழ்ந்த செய்தி கூறப்பட்டது. தற்புகழ - தன்னைப் புகழ. வல்லான் - வலிமை பொருந்தியவன்.

100 இச்செய்யுளில் சிசுபாலனுடைய கதை கூறப்பட்டது. சீலம் - பெருமைக்குணம். தேரா - ஆராயாத. இழிபே - சிறுமையையே. சொற்ருன் - சொன்னன். தாலத்து-உலகில். சீலம் - பெருமைக் குணம்.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்: செய்யுள் எண்]